# ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்

## வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்

## 2017

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்
த.பெ.இல – 1382,
27,வொக்சோல் வீதி,
கொழும்பு – 02.

22.02.2019

செயலாளர்,
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு,
73/1,காலி வீதி,
கொழும்பு – 03.

கனம் ஐயா,

**<u>ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்</u>**
**<u>2017 ம் ஆண்டுக்கான நிதியியல் அறிக்கை</u>**

1957 ம் ஆண்டின் 49 ம் இலக்க அரச கைத்தொழில் சட்டத்தின் பந்தி 30 (1) நிபந்தனைக்கு அமவாக, கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் சார்பாக 2017 ம் ஆண்டுக்குரிய அறிக்கையுடன் பின்வரும் ஆவணங்களுடன் சமாப்பிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

i). 2017 ம் ஆண்டுக்குரிய நிதியியல் அறிக்கை
ii). கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும்
iii). சபையின் அவதானிப்புக்கள் (iv) மேலே உள்ள அறிக்கை தொடர்பாக.

உங்கள் உண்மையுள்ள,

பணிப்பாளர் சபையின் சார்பாக
**ஸ்ரீலங்கா சீமெநது கூட்டுத்தாபனம்**

***கையொப்பம்,***
**எம். றியாட்சாலி,**
**தலைவர்**

# ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்

**பொருளடக்கம்** **பகக இல.**


| | | |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் சபையின் அறிக்கை | 01 – 04 |
| 02 | கூட்டுத் தகவல்கள் | 05 – 06 |
| 03 | மனித வளங்கள் | 07 |
| 04 | தலைவரின் அறிக்கை | 08 |
| 05 | கடந்த ஐந்து வருடங்களுக்கான நிதியியல் நிலவர அறிக்கை | 09 |
| 06 | கடந்த ஐந்து வருடங்களுக்கான் விரிவான வருமாண அறிக்கை | 10 |
| 07 | கணக்காய்வுக் குழு அறிக்கை – 2017 | 11 |
| 08 | கணக்காய்வாளர் திணைக்கள நாயகத்தின் அறிக்கை – 2017 | 12 – 26 |
| 09 | 31 திசெம்பர் 2017 ம் திகதியன்று நிதியியல் நிலவர அறிக்கை | 27 |
| 10 | 2017 ம் ஆண்டுக்கான விரிவான வருமாண அறிக்கை | 28 |
| 11 | 31 திசெம்பர் 2017 ம் திகதியன்று திரவ மாற்றங்களுக்கான அறிக்கை | 29 |
| 12 | 2017 ம் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் அறிக்கை | 30 |
| 13 | நிதியியல் அறிக்கை குறிப்புக்கள் – 2017 | 31 – 38 |
| 14 | நிதியியல் அறிக்கைகள் – 2017 அறிக்கை விளக்கங்கள் | 39 – 41 |
| 15 | கணக்கிடப்பட்ட வருமாண வரி – 2017 | 42 – 43 |
| 16 | கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை – 2017 க் கான பணிப்பாளர்களின் அபிப்பிராய அறிக்கை | 44 – 49 |

# ஸ்ரீ லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்

**<u>2017 ம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபையின் அறிக்கை</u>**

## 1.0 பின்னணி

1950 ம் ஆண்டின் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் சீமெந்துத் தொழிற்சாலை காங்கேசன்துறையில் தாபிக்கப்பட்டு,1955 ம் ஆண்டின் 19 ம் இலக்க கூட்டுத்தாபனச் சட்டத்திற்கு அமைய பொதுக் கூட்டுத்தாபனமாக அரசாங்கத்தால் முழுமையான ஒதுக்கத்துடன் காங்கேசன் சீமெந்து வேலைகள் (சிமென்ட் வேக்ஸ்) எனப் பெயரிடப்பட்டது. 1956 ம் ஆண்டு காங்கேசன் சீமெந்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

1957 ம் ஆண்டின் 49 ம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1959 ம் ஆண்டு ஜனவறி 1ம் திகதி இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனமாக மீளமைக்கப்பட்டது.

1980 ம் ஆண்டு வா்த்தமானி அறிவித்தல் மூலம் ''ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்'' என பெயர் மாற்றப்பட்டது. இக் கூட்டுத்தாபனமானது கைத்தொழில் மற்றும் விஞ்ஞானதுறை அமைச்சின் கீழ் செயல்பட்டு வந்ததை 1985 ம் ஆண்டு பெப்பிரவரி 1 ம் திகதி வீடமைப்பு நிர்மாணத்துறை உள்நாட்டு அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதன் பிற்பாடு 1997 ம் ஆண்டு யூன் 19 ம் திகதி மீளவும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு தொடா்ந்தும் அதன் கீழ் இயங்கி வந்த பொழுதும் 2010 வரை அதன் கீழ் தொடா்ந்தும்அரச வளங்கள் மற்றும் அபிவிருத்தி முயற்சிகள் அமைச்சின் கீழ் 2015 பெப்பிரவரி வரைஅதன் பிற்பாடு, ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் கைத்தொழில் மற்றும் வா்த்தக அமைச்சின் கீழ் தொழிற்படுகிறது.

## 2.0 பார்வை மற்றும் குறிக்கோள் அறிக்கை

### பார்வை

ஸ்ரீலங்காவிற்குள் சீமெந்துக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு வழிகாட்டுதலையும் தலைமைத்துவத்தையும் வழங்குதல்.

### குறிக்கோள்

நாட்டிற்குத் தேவையான தரமான போதுமான சீமெந்து வினியோகம் மற்றும் ஏனைய சீமெந்தை அடிப்படையாக கொண்ட உற்பத்திகளை உறுதிப்படுத்துதல்.

### பிரதான நோக்கம்

கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கம் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைத்தலலகும்.

அத்துடன்,கொள்ளுப்பிட்டி,மன்னார்,பாலவிமற்றும் அறுவாக்காலுவில் உள்ள கூட்டுத்தாபனத்திற்குரிய காணியில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன் அவ் சொத்துக்களை வருமாணம் ஈட்டக்கூடிய மாற்றியமைத்தலலகும்.

### பிரதான நடவடிக்கைகள்

1959 ம் ஆண்டு ஜனவறி 2 ம் திகதி மேலதிகமாக பிரசுரிக்கப்பட்ட வா்த்தமாணி இல.11634 குறிப்பிடப்பட்ட கூட்டுத்தாபன நடவடிக்கை விடயங்களின் கட்டளைகள் வருமாறு.

- சீமெந்து உற்பத்தி மற்றும் விற்பனை
- தொலைபேசி மற்றும் தொலைக் கம்பங்கள்,தொலைபேசி பூத்(பெட்டி) நீர்காவிச் செல்லும் சாதனங்கள்,கியூபைப் மற்றும் ரையில்ஸ் அடங்கலாக சீமெந்து கொங்கிறீற்றினால் மேற்கொள்ளப்பட் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்.
- எந்த மனிதனுக்கும் மொத்தமாக மின்சார சக்தியை வழங்குதல்

1964 ம் ஆண்டு மே 11 ம் திகதி மேலதிக வா்த்தகமானி இல.14033 ஆல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க கட்டளையின் கூடிய அங்கீகாரம்1959 ம் ஆண்டு ஜனவரி 2ம் திகதி மேலதிகமாக பிரசுரிக்கப்பட்ட வா்த்மாணி இல. 11634 இன் முதலாவது அட்டவணையின் பிரகாரம் பந்தி 1இல் ''சீமெந்து உற்பத்தி மற்றும் விற்பனை'' சொல் ஒன்றுக்குப் இன்னொன்றால் அடக்கப்படுகிறது

கூட்டுத்தாபனம் 1981 ஆம் ஆண்டில் ரூபா.1,083,618,910 யை லங்கா சீமெந்து லிமிட்டெட்டில் பங்கு மூலதனத்தில் முதலிட்டதில் 62.45 % கொண்டுள்ளது. இந்த ஒரு பங்கின் பெறுமதி ரூபா.10/=.2015 ம் ஆணடு ஒக்டோபரில் சந்தைப் பெறுமதி 8ரூபா.8.20சதம் மற்றும் 2015 ம் ஆண்டு திசெம்பர் மாதம் ரூபா.7.90 சதம். இன்றுவரை கூட்டுத்தாபனம் இவ் முதலீட்டினால் எந்தபலனையும் பெற்றிருக்கவில்லை.2010 ஏப்பிரல் தொடக்கம் 2016 பெப்பிரவரி வரையும் ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா சீமெந்து பிஎல்சி இரண்டும் ஓரே பணிப்பாளர் சபையால் கட்டுப்படுத்தி நிர்வகிக்கப்பட்டது. தற்பொழுது அவற்றின் கட்டுப்பாடு பிரிக்கப்பட்டு பிறிதொரு முகாமையால் நிர்வகிக்கப்படுகிறது.

அத்துடன் ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் ஒவ்வொன்றும் ரூபா.10/=கொண்ட 320,000 சாதாரண பங்குகளை லபார்ஜி மகாவலி சீமெந்து கம்பனியில் கொண்டுள்ளதால் ஊக்குவிப்பு சலுகையாக லபார்ஜி மகாவலி சீமெந்து கம்பனியால் ஒவ்வொரு இரண்டு பங்குக்கும் ஒரு புதிய சாதாரணபங்கு 31 டிசெம்பர் 1995 இல் வழங்கியது. தற்பொழுது கூட்டுத்தாபனம் லபார்ஜி மகாவலிகம்பனி லிமிட்டெட்டில் 480,000 சாதாரண பங்குகளை கொண்டுள்ளது. இது பங்குகளின் 10% ஆகும். கூட்டுத்தாபனம் இந்த முதலீட்டால் 1999 வரை மிகவும் சிறந்த பலாபலன்களை (பங்குலாபம்) பெற்றுள்ளது. அதன் பிற்பாடு 2004 ம் ஆண்டில் இருந்து எந்தவிதமான பங்குலாபத்தை லபார்ஜி மகாவலி பெற்றுக்கொள்வில்லை.2014 ம் ஆண்டுக்கான பங்குலாபம் ரூபா.1,728,000 வை 2015 ம் ஆண்டில் நாங்கள் பெற்றுக்கொண்டோம்.

## 3.0 தற்போதைய நிலைவரம்

புத்தளம் சீமெந்து வேலை மற்றும் றுகுணு சீமெந்து வேலைகள் மக்கள் மயப்படுத்தப்பட்டும்,மட்டக்குளி கடதாசிஉறை உரிமை திறைசேரிக்கு மாற்றப்பட்டும் காங்கேசன் சீமெந்து வேலை மட்டும் ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனத்துக்கு இருந்தும் 1990 ம் ஆண்டு யூனில் வடக்கில் ஏற்பட்ட பாதுகாப்பு நிலைமையால்மூடப்பட்டது. அந்த தொழிற்சாலை வளாகம் ஸ்ரீலங்கா ஆமியின் மேற்பார்வையின் கீழ் உள்ளது.

காங்கேசன்துறையில் உள்ள காணியை விடுவிக்கும்படி பல வருடங்களாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மீளவும் உற்பத்தி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான சாதகநிலைமையை ஒன்றுதிரட்டுவதற்கான முயற்சித்துள்ளோம். சம்பந்தப்பட்ட அதிகாரசபைகள் மற்றும் சமாதான வழியில் பாதுகாப்பு விடுவிப்பை மேற்கொள்வதற்கான தேவையானவர்களுக்கு அனுப்பியுள்ளேபம்.

2008 ஆண்டில் இருந்து நிறுவனம் சாதாரண பொடலண்ட் சீமெந்து இறக்குமதியையும் வினியோகத்தையும் உறுதிப்படுத்தியது.மற்றும் 1997 ம் ஆண்டில் இருந்து கொங்கிறீற் அடிப்படையிலான உற்பத்தி மற்றும் விற்பனையும் இருந்தது.

அரசாங்கத்தால் 2016 இல் அறிமுகப்படுத்திய ஒரு சுயவிருப்ப ஓய்வூதிய திட்டத்தில் 31.07.2016 ம் ஆண்டில் 36 ஊழியர்கள் தமது சேவையில் இருந்து விலகினார்கள். திறைசேரி ரூபா.31.94 மில்லியனை நட்டஈடு மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுக்கு மாணியம் வழங்கியது.

### a) சாதாரண பொட்லண்ட் சீமெந்து இறக்குமதி மற்றும் விற்பனை

2008 ம் ஆண்டில், நாங்கள் குறைந்த விலையில் தரமான சீமெந்தை வாடிக்கையாளர்களுக்கு வினியோகிக்க ‘‘காங்கேசன்’’ என்ற பெயரை கொண்ட சீமெந்து இறக்குமதியை ஆரமபித்தோம்.2008 ம் ஆண்டு தொடக்கம் 2012 ம் ஆண்டு வரை 219,559 மெற்றிக் தொண் சிமேந்தை இறக்குமதி செய்தோம்.

2013 ம் 2014 ம் ஆண்டு முறையே 20,300 மெற்றிக் தொண் 18,900 மெற்றிக் தொண் சீமெந்தை கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்தது. 2015 ம் ஆண்டு மற்றும் 2016 ம் ஆண்டு முறையே 1,540 மெ.தொண. மற்றும்3,815மெ.தொண் சீமெந்தை இறக்குமதி செய்தது.

2017 ம் ஆண்டு கூட்டுத்தாபனம் 980 மெ.தொண் சாதாரண பொட்லண்ட் சீமெந்தை இறக்குமதி செய்ததுடன் பணிப்பாளர் சபையின் சபையின் தீர்மானத்திற்கமைய விற்பனை உத்தியோகத்தர்கள் மற்றும் நிதியியல் ஒழுங்குகளை மேற்கொள்ளும் வரை தற்காலிமாக இடைநிறுத்தியது.

**<u>சீமெந்து விற்பனை</u>**

| ஆண்டு | 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|
| தொகை (மெ தொன்) | 980 | 4,002 | 2,780 |
| பெறுமதி (ரூபா.) | 12.66Mn | 60.15Mn | 37.87Mn |

**b) கொங்கிறீற் அடிப்படைத் தயாரிப்பு உற்பத்தி & விற்பனை**

1997 ம் ஆண்டு ஒக்டோபரில் கூட்டுத்தாபனம் உரும்பிராயில் கொங்கிறீற் தயாரிப்புத் தளத்தை ஆரம்பித்தது. இந்த அலகானது பிரதானமாக இலங்கை மின்சார சபைக்கு ஆர் சி கம்பங்களையும் மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம்முக்கு ரெலிகிறாப் கம்பங்களையும் தயாரிக்க ஒப்பந்தமாகியது.

2009 ம் ஆண்டில், நாங்கள் கொங்கிறீற் கட்டிகள்,தூண்கள்,நடைபாதை சிலப்ஸ் மற்றும் வேலிக் கம்பங்களை கட்டிடத் திணைக்களம்,வீதி அபிவிருத்தி அதிகார சபை,யாழ் பல்கலைக்கழகம் மற்றும் மேலதிமாக கொங்கிறீற் கம்பங்களை பொதுமக்களுக்கு வழங்கவும் தயாரிக்கத் தொடங்கினோம்.

நாங்கள் 2009 தொடக்கம் 2012 வரை 16,431 கொங்கிறீற் அடிப்படை தயாரிப்புக்களை தயாரித்தோம்.

2013 ம் ஆண்டில் கூட்டுத்தாபனம் 2,003 எண்ணிக்கையான கொங்கிறீற் கம்பங்களை தயாரித்ததுடன் 2014 இல் 1,674 கொங்கிறீற் அடிப்படை தயாரிப்புக்ளை தயாரித்தது. 2015 ம் ஆண்டில் கூட 191 எண்ணிக்கையான கொங்கிறீற் கம்பங்கள்,832 பந்தல் கம்பங்கள் மற்றும் 71,771 எண்ணிக்கையான கொங்கிறீற் கட்டிகளை தயாரித்தது. 2016 ம் ஆண்டில் 168 எண்ணிக்கையான கொங்கிறீற் கம்பங்கள்,224 வேலிக்கம்பங்கள்,95 எண்ணிக்கையான ஆர் சி கொலம் மற்றும் 30,122 எண்ணிக்கையான கொங்கிறீற் கட்டிகள் தயாரிக்கப்பட்டன.

**கொங்கிறீற் தயாரிப்பு விற்பனை**

| ஆண்டு | 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|
| கொங்கிறீற் கம்பங்கள்(தொகை) | - | 304 | - |
| வேலிக் கம்பங்கள்(தெழக) | 4 | 253 | 391 |
| ஆர்சி கொலம் (தொகை) | 145 | 169 | 419 |
| கொங்கிறீற் கட்டிகள் | - | 46,907 | 54,805 |
| **மொத்தப் பெறுமதி(ரூபா.)** | **1.13Mn** | **4.07Mn** | **2.69Mn** |

சுற்றறிக்கை இல.02/2016 தொடர்பில் இரண்டுபேர் தவிர சகல கா சீ வே ஊழியர்களும் 31.107.2016 தமது சேவையில் இருந்தும் விலகினர். இரண்டு ஊழியர்கள் கொங்கிறீற் தயாரிப்புக்களை விற்பனை செய்ய வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

**c) நிறுவனத்தினுடைய செயலநுட்பத்தில் கவனம் செலுத்துவதற்கான இடைக்கால நடவடிக்கைகள்**

நாங்கள் கொள்ளுப்பிட்டி,மன்னார்,புத்தளம் மற்றும் காங்கேசன்துறையில் உள்ள எமது காணியில் பொருத்தமான அபிவிருத்தி திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். அதன்பிற்பாடு, நாங்கள் நிறுவனத்தை செயல் நுட்டபமுடைய நிலமை மற்றும் நிலைப்பாட்டை வெற்றிகொள்ள முடியும்.

நிறுவனத்தினுடைய மீளமைத்தல் திட்டம் மற்றும் 2015 ம் ஆண்டில் இருந்து பாராளுமன்னத் தீர்மானத்தின் படி ஒரு கம்பனியாக லங்கா சீமெந்து பி.எல்.சி யாக மாற்றப்பட்டதன் பிற்பாடு ஒன்று சேர்த்தல். துற்பொழுது, இவ் இரண்டு அமைப்புக்களும் 2016 இல் இருந்து வெவ்வேறு பணிப்பாளர் சபையால் நிர்வகிக்கப்படுகிறது.

## 4.0 இலாபகத்தன்மை

கூட்டுத்தாபனம் 2011 இல் ஒரு மிகையான ரூபா.2.6 மில்லியனை ஏற்படுத்தியது. 2012,2013 & 2014 இல் கூட்டுத்தாபனம் தொடர்சியாக 75 மில்லயன், 424 மில்லயன் & 13 மில்லின் முறையே நட்டத்தை கொண்டிருந்தது. மீண்டும் 2015 இல் கூட்டுத்தாபனம் ஒரு மிகை ரூபா.4.34 மில்லியனை கொண்டருந்தது. 2016 இல் திரண்ட செலவீனங்கள் ரூபா.31,700,843/- ற்கு முன்னர் கணக்கியல் இலாபம்..

2017 நிதியியல் அறிக்கையின்படி,வருமாணவரி ரூபா.18,562,875/- ற்கு முன்னர் கணக்கியல் இலாபமாக வெளிப்படுத்தப்பட்டது இது கடந்த வருட எண்ணிக்கையுடன் 30.62.% அதிகரிப்பு. சீமெந்து இறக்குமதி இடைநிறுத்தம் நேரடியாக அதை பாதித்தது. இந்த வருடத்தில் நாங்கள் 40% வங்கிக் கடன் வட்டி விட்டுகொடுப்பில் இருந்து தோன்றியது மற்றும் அது ரூபா.16,144,188/- ஆகும்.அதன் பலானக கூட்டுத்தாபனக்கு ரூபா.15,612,753/- வரிக்குப் பின்னாரான இலாபமாக அறிக்கையிடப்பட்டது.

## 5.0 ஸ்ரீ லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால செயல்

காங்கேசன்துறையில் உள்ள ஸ்ரீல.சீ.கூ சொந்தமான ஒரே சீமெந்து தொழிற்சாலை 1990 ம் ஆண்டு தற்காலிகமாக மூடிய காரணத்தால் ஸ்ரீ லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் தற்பொழுது உற்பத்தி கட:டுப்படுதப்பட்டுள்து. எப்படியிருந்த பொழுதும்,காங்கேசன் சீமெந்து வேலையால் சீமெந்து உற்பத்தியை மீள ஆரம்பிப்பது உடனளடியாக எதிகாலத்தில் வெளிப்படுத்துவது கடினமானதாகும். தேவையான அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அதிகாரசபைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனம் ஸ்ரீலங்கா ஆமியிடம் இருந்து காங்கேசன்துறை தொழிற்சாலை வளாகத்தை கையளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது ஆனால் அவர்கள் அதனை எம்மிடம் கையளிக்கவில்லை. அவற்றை எம்மிடம் கையளித்தால் நாங்கள் பொருத்தமான அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சால் 27.10.2016 திகதியிடப்பட்ட கடித தொடர்பு இல.எம்ஜசி ஆர் / 07/ 06 /07, வழங்கப்பட்ட நிபந்தனைக் அமைய 20.10.2016 இல் நடைபெற்ற கூட்டம் தொடாப்பில் நிறுவனத்தின் நடவடிக்கை முன்னேற்ற 31.07.2016 சுயவிருப்ப ஓய்வூதிய திட்டம் செயல்படுத்தப்பட்டது. நாங்கள் கொள்ளுப்பிட்டி,மன்னார்,புத்தளம் மற்றும் காங்கேசன்துறையில் உள்ள எமது காணியில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த பொருத்தமான கவனம் எடுத்துள்ளோம்.

எமது காணி மற்றும் ஏனைய வளங்களின் அபிவிருத்தி திட்டங்களை அறிமுகப்படுத்த சம்பந்தப்பட்ட பகுதியினருடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அத்துடன், நாங்கள் நிதியியல் வலிமை & நிறுவனத்தின் தொடற்சியான நிலைப்பாடுகளை வெற்றிபெறச் செய்யும் கருத்துருவாக்கத்தில் இருந்து வருமாணம் உருவாகக் கூடியதாக ஆக்குவோம்.

## 6.0 பாராட்டுதல்கள்

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தானத்துக்கு 2017 ம் ஆண்டில் நேரடியாக ஒத்துழைப்பு வழங்கிய கௌரவ மாண்புமிகு கைத்தொழில் & வர்த்தக அமைச்சர், அமச்சின் உத்தியோகத்தர்கள்,பொதுத் திறைசேரி,ஸ்ரீலங்கா தரநிர்ணய நிறுவனம்,ஸ்ரீலங்கா துறைமுக அதிகார சபை மற்றும் அரச வங்கிகள்,ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் சீமெந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு ஸ்ரீ.சீ.கூ பணிப்பாளர் சபை மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

அத்துடன் ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களால் வழங்கப்பட்ட சேவைகளுக்கு பணிப்பாளர் சபை தமது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது.

## கூட்டுத்தாபனம் தொடர்பான தகவல்கள்

**பதிவுசெய்யப்பட்ட தலைமைக் காரியாலயம்**

ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்,

இல.27 வொக்சோல்மன்சன்,

வோக்சோல் வீதி,கொழும்பு – 02.

தொலைபேசி இல: 011-2440201,2440203

தொலை நகல் இல. : 011-2448866

**பதிவுசெய்யப்பட்ட துணைநிலை தலைமைக் காரியாலயம்**

லங்கா சீமெந்து லிமிட்டடெட்,

இல.27, வொக்சோல்மன்சன்,

வோக்சோல் வீதி, கொழும்பு– 02.

தொலைபேசி இலக்கங்கள் : 011-2447746, 254158

**கொங்கிறீற் திட்டம்,யாழ்ப்பாணம்**

காங்கேசன் சீமெந்து வேலைக்களம்,

காங்கேசன்துறை

தொலைபேசி இல : 021 321 5340/41

**சீமெந்துக் களஞ்சியம்**

472, ஸ்ரீசங்கராஜ மாவத்தை,

கொழும்பு 10..

தொலைபேசி: 011-3030041

பெகஸ் : 011-4923959

**வங்கிகள்**

மக்கள் வங்கி

இலங்கை வங்கி.

**கணக்காய்வாளர்கள்**

கணக்காய்வாளர் திணைக்களம்,

பத்தரமுல்லை.

# ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்

2017 ம் ஆண்டில் பினவரும் பணிப்பாளர்களை முகாமைத்துவ சபை கொண்டிருந்தது.

| | | |
|---|---|---|
| 01. திரு.ஏச்.அகமட் பயிலா | தலைவர் | - நியமனத் திகதி 10.12.2015 |
| 02. திரு.எஸ்.ஆப்தீன் ஏகியா | தொழிற்பாட்டுப் பணிப்பாளர் | –நியமனத் திகதி 25.02.2016 |
| 03. திரு.டபிள்யு.டி.யானக | பணிப்பாளர் | - நியமனத் திகதி 25.02.2015 |
| 04. திரு. எம்.எஸ்.எம்.கபீர் | பணிப்பாளர்r | - நியமனத் திகதி 18.03.2015 |
| 05. திரு. என்.எம்.முனவர் | பணிப்பாளர் | - நியமனத் திகதி 31.03.2015 |
| 06. திரு.ஏ.ராபீக் | பணிப்பாளர் | - நியமனத் திகதி 30.04.2015 |
| 07. திரு.டி.எஸ்.ஏ.கொஸ்ரா | திறைசேரிப் பிரதிநிதி | - நியமனத் திகதி 30.10.2015 |
| 08. திரு.ரி.ஓ.ஆர்.வணிகரத்தின | அமைச்சின் அவதானிப்பாளா | - நியமனத் திகதி 10.03.2015 |
| 09. திருமதி.கே.என்.பெனாண்டோ | அமைச்சின் அவதானிப்பாளர் | - நியமனத் திகதி 26.12.2017 |

2018 ம் ஆண்டில் பினவரும் பணிப்பாளர்களை முகாமைத்து சபை கொண்டிருந்தது.

| | | |
|---|---|---|
| 01. திரு.எம்.றியாட்ஸ் சாலி | தலைவர் | - நியமனத் திகதி 25.06.2018 |
| 02. திரு.எஸ்.ஆப்தீன் ஏகியா | தொழிற்பாட்டுப் பணிப்பாளா | - நியமனத் திகதி 25.07.2018 |
| 03. திரு. எம்.எஸ்.எம்.கபீர் | பணிப்பாளர் | - நியமனத் திகதி 25.07.2018 |
| 04. திரு. என்.எம்.முனவர் | பணிப்பாளர் | - நியமனத் திகதி 25.07.2018 |
| 05. திரு.ஏ.ராபீக் | பணிப்பாளர் | - நியமனத் திகதி 25.07.2018 |
| 06. திரு.டி.எஸ்.ஏ.கொஸ்ரா | திறைசேரிப் பிரதிநிதி | - நியமனத் திகதி 25.07.2018 |
| 07. திரு.எல்.ஜி.நிலங்க டி சோமபால | அமைச்சின் அவதானிப்பாளர் | - நியமனத் திகதி 25.07.2018 |

**சிரேஸ்ட முகாமைக் குழு**

| | | |
|---|---|---|
| 01. திருமதி.எம். ஜி ஏ. ரி. ஆர் ஜெயதிலக | கணக்காளர் | தலைமைக் காரியாலயம் |
| 02. திருமதி. இ. எஸ்.சாந்தனி | நிர்வாக உத்தியோகத்தர் | தலைமைக் காரியாலயம் |

# ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்

## 31.12.2017 ம் திகதியன்று மனித வளங்கள்

| வகை | சிரேஸ்ட முகாமை | மத்தியதர முகாமை | கீழ்நிலை முகாமை | முகாமைத்துவ உதவியாளர்கள் | ஆரம்ப மட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| தலைமைக் காரியாலயம் | 02 | 01 | 01 | 04 | 07 | 15 |
| காங்கேசன் சீமெந்து வேலைக்களம் | -- | -- | -- | -- | 01 | 01 |
| மொத்தம் | **02** | **01** | **01** | **04** | **08** | **16** |

# தலைவரின் அறிக்கை

2015 பெப்பிரவரி வரை ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் அரச வளங்கள் தொழில் & அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைபெற்றன. தற்பொழுது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் எமது நடவடிக்கைகள் தொடர்கின்றன.

2007 ஏப்பிரல் வரை தலைமைக் காரியாலயக் கிளையால் சாதாரண பொட்லண்ட் சீமெந்தை இறக்குமதி செய்வதுடன் அவற்றை வினியோகிப்பதே நிறுவனத்தின் குறிக்கோளாகும். அத்துடன், இவ் வருடத்தில் ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனத்துக்கு சவால்கள் நிறைந்த வருடமாகும். நாங்கள் தொடர்ந்தும் எங்களுடைய நடவடிக்கைகளில் புரள்வாக ரூபா.15,130,564/- வரிக்கு முன்னரான இலாபமா ரூபா.18,174,716/- ம் வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா.15,298,106/-கொண்டிருந்தது. 2017 ம் ஆண்டில் மொத்த ஒன்று திரண்ட வருமாணம் ரூபா.18,562,875/- மற்றும் ரூபா.12,703,686 /- ஆகும்.

நாங்கள் எமது பிரதான சொத்தாகிய தரமான மற்றும் பொருளாதார வளமான அந்த சுண்ணாம்புக் கல்,கழிமண், இல்மைனற் முதலிய வளக் காணிகளை புதிய அபிவிருத்தி திட்டங்கள் ஊடாக வருமாணத்தை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம்.நாங்கள் நிறுவனத்தின் நீண்டகால சலுகையை கொண்டுவரும் நோக்கில் அவற்றை இத் திட்டங்களில் கொண்டுவர எதிர்பார்த்துள்ளோம்.

முன்னோக்கிய பார்வை, இவ் வருடத்தில் இருந்து நாங்கள் நம்பிக்கையாக நிறுவனத்தின் இலாபமீட்டல் மற்றும் திறமையுள்ள நிலமைக்கு முன்னேற்றத்தை நிலைநிறுத்துவோம்.

***கையொப்பம்,***
**குசேயின் அகமட் பயிலா**
**தலைவர்**
**ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்**

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்

## நிதியியல் நிலவர அறிக்கை

31 திசெம்பர் முடிவடைந்த ஆண்டு, 2013 - 2017

| சொத்துக்கள் | 2017<br>ரூபா.'000 | 2016<br>ரூபா.'000 | மீள குறிப்பிட்ட<br>2015<br>ரூபா.'000 | 2014<br>ரூபா.'000 | 2013<br>ரூபா.'000 |
|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | | |
| ஆதனம், யந்திரம் மற்றும் சாதனங்கள் | 1,590 | 3,887 | 4,173 | 779,317 | 779,486 |
| சொத்துக்களில் முதலீடு | 796,950 | 773,700 | 773,700 | - | - |
| நீண்டகால பெறவனவுகள் | - | - | 757,224 | 757,224 | 757,223 |
| முதலீடுகள் | 624,063 | 624,063 | 862,458 | 721,589 | 678,244 |
| நிதியியல் சொத்துக்கள் | 5,689 | 5,162 | 35,469 | 33,428 | 31,247 |
| | **1,428,292** | **1,406,812** | **2,433,024** | **2,291,558** | **2,246,200** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| பொருட்கள் | 1,241 | 3,099 | 8,594 | 18,933 | 39,024 |
| வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகள் | 74,469 | 89,212 | 80,551 | 96,247 | 89,549 |
| முற் கொடுப்பனவுகள் | - | - | - | - | 261 |
| பணமும் பணத்துக்கு நிகராவையும் | 9,158 | 13,687 | 8,743 | 2,076 | 3,592 |
| | **84,868** | **105,998** | **97,838** | **117,256** | **132,426** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **1,513,160** | **1,512,810** | **2,530,863** | **2,408,814** | **2,378,626** |
| **பரிப்புக்களும் பொறுப்புக்களும்** | | | | | |
| **புரிப்புக்கள்** | | | | | |
| வரையறுக்கப்பட்ட மூலதனம் | 966,971 | 966,971 | 966,971 | 966,971 | 966,971 |
| பொது ஒதுக்கங்கள் | 9,997 | 9,997 | 9,997 | 9,997 | 9,997 |
| மீள் பெறுமதியிடப்பட்ட ஒதுக்கங்கள் | 561,203 | 536,119 | 536,119 | 713,619 | 713,619 |
| நிறுத்திவைக்கப்பட்ட சம்பாத்தியம் | (197,585) | (210,289) | 515,234 | 333,315 | (66,820) |
| விற்பனைக்கு தயாரகவுள்ள ஒதுக்கங்கள் | (465,956) | (465,956) | (227,560) | (368,430) | - |
| | **874,630** | **836,842** | **1,800,761** | **1,655,474** | **1,623,767** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை** | | | | | |
| நீண்டகாலப் பொறுப்புக்கள் | 492,426 | 492,426 | 500,426 | 519,303 | 543,914 |
| விடுபட்ட ஓய்வுகால சலுகைகள் | 3,796 | 3,298 | 18,697 | 19,394 | 18,290 |
| | **496,222** | **495,724** | **519,123** | **538,698** | **562,204** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்துமதிகள் | 42,317 | 46,502 | 81,305 | 93,227 | 85,224 |
| வட்டியுடனான பொறுப்புகளின் தற்போதைய நிலை | 97,794 | 97,793 | 101,020 | 68,515 | 79,015 |
| வங்கிக்கடன் வட்டி செலுத்துமதிகள் | 2,198 | 21,768 | | | |
| பணமும் பணத்துக்கு நிகராவையும் | - | 14,181 | 28,653 | 52,900 | 28,416 |
| | **142,308** | **180,244** | **210,978** | **214,642** | **192,655** |
| **மொத்த பரிப்புக்களும பொறுப்புக்களும்** | **1,513,160** | **1,512,810** | **2,530,863** | **2,408,814** | **2,378,626** |

அடைப்புக்குள் பிரதிபலிக்கும் எண்ணிக்கைகள் கழிக்கப்படுபவை

**திரண்ட வருமான அறிக்கை**

**2013 – 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது.**

| | 2017<br>ரூபா.'000 | 2016<br>ரூபா.'000 | மீள குறிப்பிட்ட<br>2015<br>ரூபா.'000 | 2014<br>ரூபா.'000 | 2013<br>ரூபா.'000 |
|---|---|---|---|---|---|
| வருமாணம் | 15,130 | 64,221 | 40,571 | 285,657 | 287,913 |
| விற்ற சரக்கின் கொள்விலை | (16,215) | (66,525) | (50,781) | (280,878) | (272,178) |
| **மொத்த இலாபம்/(நட்டம்)** | **(1,084)** | **(2,304)** | **(10,211)** | **4,779** | **15,735** |
| ஏனைய வருமாணம் | 56,555 | 91,542 | 60,043 | 34,233 | 34,885 |
| வினியோகச் செலவுகள் | (272) | (292) | (1,198) | (2,951) | (6,670) |
| நிர்வாகச் செலவீனங்கள் | (20,524) | (41,172) | (30,461) | (29,211) | (448,079) |
| நிதிச் செலவீனங்கள் | (16,501) | (15,704) | (15,334) | (20,642) | (20,474) |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | **18,174** | **32,070** | **2,839** | **(13,793)** | **(424,603)** |
| வரிகள் | (2,877) | (369) | (255) | - | - |
| ஏனைய திரண்ட வருமாணம்/(செலவு) | 586 | (995,620) | 140,870 | 43,345 | - |
| கடந்தவருட சீராக்கல்கள் | (3,180) | - | - | - | - |
| **வரிக்குப் பின்னரான இலாபம்/((நட்டம்)** | **12,703** | **(963,181)** | **143,454** | **(29,552)** | **(424,603)** |

அடைப்புக்குள் உள்ள இலக்கங்கள் கழிப்பவை
சுட்டிக்காட்டுகிறது.

## ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்

## கணக்காய்வுக் குழு அறிக்கை -2017

கூட்டுத்தாபனம் கணக்காய்வுக் குழுவில் மூன்று நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்களை கொண்டிருந்தது, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் மற்றும் ஒரு பிரதிநிதி கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தில் இருந்து குழுவின் அவதானிப்பாளராக.

மதிப்பீட்டு குழுவின் கீழ் திருமதி. டி.எஸ்.ஏ. கொஸ்ரா தலைவர், திரு.எம்.எஸ்.எம்.கபீர் மற்றும் திரு.என்.எம்.முனவர் ஆகிய இருவரும் நிறைவேற்றுதரமற்ற பணிப்பாளர்களாவர்

கணக்காய்வுக் குழுவில் அடங்குகின்ற பிரதான செயற்பாடு மற்றும் பொறுப்புகப்கள்,

அ ) ஸ்ரீலங்கா கணக்கியல் நியமம் மற்றும் ஏனைய பொருத்தமான சட்ட வேண்டுகோள்கள் தொடர்புடன் குற்றச்சாட்டுகள் அற்ற நிதியியல் அறிக்கையை செய்துமுடிப்பதனை உறுதிப்படுத்த மேற்பார்வை செய்தலை நோக்காக சபைக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

ஆ ) சகல சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்குகளை அரசாங்கத்தால் வினியோகிக்கப்பட்ட சுற்றுநிருபத்துக்கு அமைவாக நடைபெறுதலை உறுதிப்படுத்தல் மற்றும் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்கள் இல்லாமல் சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள சபைக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

இ ) உள்ளக மதிப்பீடு / வெளியக கணக்காய்வு அறிக்கை மற்றும் கோப்பின் சிபார்சுகளை சபை சீர்படுத்த நடவடிக்கை எடுக்க உதவிபுரிதல்.

ஈ ) உள்ளக கட்டுப்பாட்டு முறமையில் போதுமான முன்னேற்றம் மற்றும் அறிமுகப்படுத்த சபைக்கு உதவுதல்.

பினவரும் நடவடிக்கைகள் இவ் நிதியில் ஆண்டின் கீழ் மதிப்பிடுதல் உள்ளக கணக்காய்வுக் குழுவின் உறுதிப்பாடாகும்.

- கணக்காயவு செய்யப்படாத மாதாந்த நிதியியல் அறிக்கையை மதிப்பீடு செய்தல்
- கணக்காய்வு செய்யப்பட்ட இவ் வருட நிதியியல் அறிக்கையை மதிப்பீடு செய்தல்
- கணக்காய்வாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை மற்றும் எச்சரிக்கை மற்றும் முகாமையால் தொடரவேண்டிய நடவடிக்கையை மதிப்பீடு செய்தல்
- கொடுப்பனவு வேண்டுகோள்கள் மற்றும் சட்டபூர்வமான அறிக்கையுடன் குற்றச்சாட்டு அறிக்கையை மதிப்பீடு செய்தல்.

***கையொப்பம்,***
**டி.எஸ்.ஏ.கொஸ்ரா,**
**தலைவர்,**
**கணக்காய்வுக் குழு**

මගේ අංකය
எனது இல. } டீசீஎம்/ஏ /எஸ்எல்சீசீ/53/2017/ஏப்ஏ
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2018 செப்டம்பர் 05
Date

தலைவர்,

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

**இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14 (2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை சீமெந்து கூட்டுதாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 29(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகார சட்டத்தின் 13 (7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை ஒன்று 2018 ஜுலை 17 ஆம் திகதி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிற கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව  இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.  No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34  +94 11 2 88 72 23  ag@auditorgeneral.gov.lk  www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 திரட்டிய நிதிக் கூற்றுக்கள்**

கூட்டுத்தபனத்தினால் 1981 ஆம் ஆண்டின் போது லங்கா சீமெந்து கம்பனியின் ரூபா 10 இற்கான பங்குகள் 108,361,891 இற்கான ரூபா 1,083,618,910 தொகை முதலீடு செய்திருந்ததுடன், இந்தப் பங்குகளின் தற்போதைய சந்தை பெறுமதி ரூபா 617,662,779 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் நிருவகிக்கும் கம்பனி வ / ப லங்கா சீமெந்து கம்பனியின் பங்குகளின் உரிமையில் 62.45 சவீதம் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக இருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காக திரட்டிய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1964 ஏப்ரல் 17 ஆம் திகதி 14012 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் காங்கேசன்துறையில் அமைந்துள்ள சீமெந்து தொழிற்சாலை மற்றும் காணி என்பன கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியாக உரித்தாக்கப்பட்டிருந்த

போதிலும் அச்சொத்துக்களின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) புத்தளம் மாவட்டத்தில் பாலாவியில் அமைந்துள்ள அட்டவில்லு எனப்படும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 221 ஏக்கர் காணியில் இருந்து 69 ஏக்கர்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 5352 ஏக்கர்களான அருவக்காலு சுண்ணாம்பு கல்படிவு 50 வருட காலத்திற்காக ஹொல்ஸியம் லங்கா கம்பனி (தற்போது சியேம் சிட்டி கம்பனி) க்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டளவிலும் கூட்டுத்தாபனத்தின் பிரதான வருமானமாக இந்த சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களுக்கு பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2013 ஆண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 255,967 இற்கான பொருளாதார சேவைக் கட்டண வரித் தொகை மற்றும் 2016 ஆண்டில் குறைபாடுகளுடன் கணிக்கப்பட்டிருந்தமையினால் மிகையாக செலுத்தியிருந்த ரூபா 129,211 இற்கான பொருளாதார சேவைக் கட்டணக் கொடுப்பனவு, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவிக்காமல் பேரேட்டுக் கணக்குகளின் மூலம் ஒன்றிற்கு ஒன்று சமப்படுத்தியிருந்தமையால் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டண வரிக் கணக்கின் மீதி ரூபா 129,211 இனால் குறைவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(உ) கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் 1990 கணக்கு ஆண்டு தொடர்பாக வழங்கப்பட்ட ரூபா 335,249 தொகை கணக்காய்வுக் கட்டணத்தை செலுத்த வேண்டிய செலவு ஒன்றாக கணக்கீடு செய்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல 2015,2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்கான கணக்காய்வு கட்டண ஒதுக்கம் 2015 ஆண்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கூட்டுத் தொகை ரூபா 571,875 தொகை குறைவாக ஒதுக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கு எதிராக காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை

| | கணக்கு விடயம் | சமர்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| (அ) | 2008 ஆண்டின் போது 8600 மெற்றிக் தொன்கள் சீமெந்து இறக்குமதி செய்தல் | மொத்த சீமெந்து இறக்குமதி தொடர்பான கொடுப்பனவு உறுதிச் சான்று, முறைப் பிரகாரம் பேணப்பட்ட கோவைகள் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள். |
| (ஆ) | கணிணிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் 32 பண்டங்கள் குறைவாகக் காணப்பட்டன. அவற்றின் கிரயம் பறுமதி |

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு கூட்டுத் தொகை ரூபா 74,469,339 தொகையான வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதியில் 1 வருடங்கள் முதல் 3 வருடங்களுக்கு இடைப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 11,510,027 தொகையும் 03 வருடங்களை விட மிகையான கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 58,179,621 தொகையும் காணப்பட்டதுடன் இந்த நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு கூட்டுத் தொகை ரூபா 42,317,003 தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் 1 வருடம் முதல் 3 வருடங்களுக்கு இடைப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,851,642 தொகையும் 3 வருடங்களை விட மிகையான கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,896,742 தொகையும் காணப்பட்டதுடன் இந்த நிலுவை கடன் மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 12,854,883 தொகையான முன்னைய ஆண்டுகளுக்கான பெறுமதி

கூட்டிய வரியினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தியிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டம் | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 8,410,618 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரித் தொகையினை இவ்வறிக்கை திகதி வரை அனுப்பியிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| நிதிப் பிரமாணம் 751 | பிரமாணத்தின் பிரகாரம் பொருட் பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை. |
| (இ) 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01 / 2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | |
| (i) பிரிவு 5 (1)(அ) | குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொழில் முயற்சியிலுள்ள சக்திகளை மற்றும் பலவீனங்களை மதிப்பீடு ஆளாக்கி திட்டங்களை நாளது வரை ஆக்கப்பட வேண்டுமெனினும், நிறைவேற்றிக் கொள்ள முடியாத குறிக்கோள்கள் மற்றும் செயற்படுத்த முடியாதிருந்த குறிக்கோள்கள் தொடர்பாக முறையான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கூட்டுத்தாபனத்தின் திட்டங்களை நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | பிரிவு 5(1)(ஈ) | அவ்வக் காலத்தில் நெருங்க வேண்டிய இலக்குகளை நிறுவுதலும் அவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் பொறுப்புகளின் செயற்பாட்டு மட்டம் வரை பகிரப்பட வேண்டுமெனினும், வருடாந்தம் நெருங்க வேண்டிய இலக்குகள் மற்றும் அக் குறிக்கோள்களுக்கான பொறுப்புக்களை பகிர்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br><br>பிரிவு 9.4 | மீளாய்வாண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் இன்றி இரண்டு ஊழியர்கள் 2017 ஆகஸ்ட் 01 திகதி முதல் சீமெந்து கம்பனிக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2015 ஜுலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கை | முற்பணங்களை தீர்த்தல் வழங்கப்பட்டிருந்த நிதியாண்டு திசெம்பர் 31 திகதி விடக் கூடுதலாக தாமதிக்க கூடாது எனினும், 2010 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை 13 சந்தர்பங்களில் வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 240,946 இற்கான முற்பணங்களை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறும் தீர்த்தல் நடைபெற்றிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 15,298,106 இற்கான மிகையொன்றாகக் காணப்பட்டதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் போது ரூபா 31,700,843 இற்கான மிகையொன்று காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 16,402,737 இற்கான குறைவடைதல் ஒன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான விற்பனவுகள் ரூபா 48,489,811 இனால், அதாவது 76 சதவீதத்தினால் குறைந்திருத்தல் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 34,986,914 இனால் அதாவது 38 சதவீதத்தினால் குறைந்திருத்தல்

மேற்கூறியவாறு தேறிய வருமானம் குறைவதற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது பற்றாக்குறை ஒன்று காணப்பட்ட போதிலும் மீண்டும் 2015 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வருடாந்தம் மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசுக்குச் செலுத்திய வரிகள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 338,370,664 இற்கான சூனியப் பெறுமதியாகக் காணப்பட்ட கூட்டுதாபனத்தின் பங்களிப்பு 2014 ஆண்டு முதல் நேர் பெறுமதி ஒன்றாக மாறிய போதிலும், வருடாந்தம் குறைவடைந்து மீளாய்வாண்டு அளவில் ரூபா 37,026,792 இற்கான நேர் பெறுமதியை கொண்டிருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 14 திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரிவு 02 மற்றும் பிரிவு 5 (2) இன் பிரகாரம் செயல்நடவடிக்கை திட்டத்தில் அடங்க வேண்டிய மனிதவள அபிவிருத்தி திட்டம், உள்ளகக் கணக்காய்வுத் திட்டம், கடனைத் திருப்பிச் செலுத்தும் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1 இன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் காட்டப்படுள்ள இலக்குகள் யதார்த்மானதாகவும் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டுமெனினும், தன்னிச்சையான ஓய்வூதிய நட்டஈட்டு திட்டமொன்றினை செயற்படுத்தி ஊழியர்களை அகற்றிய நிறுவனமொன்றிற்கு செயல் முறையில் நிறைவேற்ற முடியாத குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் கூட்டுத்தாபனத்தின் திட்டத்தில் காட்டபட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(இ) மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரிவு 5.1.2 இன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் அடங்க வேண்டியிருந்த நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு,

மனித வளங்கள் , முகாமைத்துவ திறமைகள் மற்றும் தொழில்நுட்ப அறிவு, நிறுவனத்தில் தற்போது காணப்படும் வளங்கள் மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வு ஆகிய முக்கிய விடயங்களை கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீமெந்து உற்பத்தி செய்து விற்பனை செய்தல் மற்றும் சீமெந்து சார்ந்த உற்பத்தி செய்தல் கூட்டுத்தாபனத்தின் முக்கிய குறிக்கோள்களாக இருந்த போதிலும் கடந்த யுத்த சூழ்நிலையின் பின்னர் காங்கேசன்துறையில் சீமெந்து உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதி அளவில் சீமெந்தி பைகள் இறக்குமதி செய்து விற்பனை செய்தல் மற்றும் கொங்கிரிட் உற்பத்தி செய்தலும் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அரசு முயற்சிகள் தினைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் 2016 அக்தோபர் 20 திகதி பீஈ/ஆர்ஈஎஸ்/வீஆர்எஸ் இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம் தன்னிச்சையான ஒய்வூதிய நட்டஈடு வழங்கிய பின்னர் கூட்டுத்தாபனத்தினால் மீதியான ஊழியர்களைப் பயன்படுத்தி வாடகை தீர்மானித்தல் , காங்கேசன்துறை உற்பட மீதியாகவுள்ள காணிகளுக்காக வாடகையாளர்கள் கண்டுபிடித்தல், வாடகை உடன்படிக்கைகளை நாளது வரை ஆக்கல் ஆகிய அலுவல்கள் மேற்கொண்டு அந்த வருமானத்தின் மூலம் ஊழியர்களின் கொடுப்பனவுகளை மேற்கொண்டு மீதியாக உள்ள தொகையை அரசிற்கு அனுப்பபட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் விற்பனைக்காக சீமெந்து கொள்வனவு 91 சதவீதத்தினால் குறைந்திருந்ததுடன், அந்த குறைவடைதல் 2014 ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆண்டின் போது 90 சதவீதமாக காணப்பட்டது. 2016 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது விற்பனை 77 சதவீதத்தினால் அதாவது, ரூபா 46,146,262 இனால் குறைந்திருந்தது. 2017 ஆரம்ப அரை ஆண்டின் பின்னர் சீமெந்து இறக்குமதி செய்து விற்பனவு செய்தலை நிறுத்தப்பட்டமை இதற்கு காரணமாக இருந்தது.

(ஈ) காங்கேசன்துறை கொங்கிரீட் உற்பத்திகள் மற்றும் விற்பனை பிரிவின் மொத்த விற்பனை வருமானத்தை விட கூடுதலான செலவுகள்

மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தமையால் தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், கடந்த ஐந்து ஆண்டுகளின் போது கொங்கிரீட் உற்பத்தி பொருட்களின் விற்பனை 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டிற்கு இடையே ரூபா 25,620,000 முதல் ரூபா 1,128,281 தொகை இடையே வீச்சில் தளம்பலுடன் காணப்பட்டது. 2016 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது கொங்கிரீட் தூண்களின் விற்பனை 72 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது சீமெந்து சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளல் நிறுத்தப்பட்டிருந்ததால் அதற்கான காரணமாகக் இருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் வங்கி நடைமுறை கணக்கு ஒன்றில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் வங்கி மீதி ரூபா 608,359 தொகையாக காணப்பட்ட போதிலும், பரீட்சை மீதிகள் மற்றும் நிதிக் கூற்றுகளின் பிரகாரம் அந்த வங்கி நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 2,156,449 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,548,089 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது 2008 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் இந்த வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அரச வங்கிகளில் இருந்து பெற்றிருந்த செலுத்த வேண்டிய மொத்த வங்கிக் கடன்களின் பெறுமதி ரூபா 97,793,352 தொகையாக இருந்தது. அந்த வங்கி கடன்களுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட மொத்த வங்கிக் கடன் வட்டி ரூபா 19,880,338 தொகையாக காணப்பட்டதுடன், கூட்டுத்தாபனத்தின் வினைத்திறனற்ற நிதி முகாமைத்துவத்தின் காரணமாக பாரிய நிதி கிரயம் ஒன்று வருடாந்த அரச வங்கிகளுக்கு செலுத்த நேரிட்டியிருந்தது.

(இ) தன்னிச்சையான ஒய்வூதிய நட்டஈட்டு திட்டத்தினை செயற்படுத்திய பின்னர் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக லங்கா சீமெந்து கம்பனியின் 62.45 சதவீத பங்குகளை, பங்குச் சந்தையில் விற்பனை செய்து வருமானம் ஒன்றினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அரச முயற்சி திணைக்களத்திற்கு மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் 2016 அக்தோபர் 20 திகதிய பீஈ/ஆர்ஈஎஸ்/வீஆர்எஸ் இலக்கங் கொண்ட கடிதத்தின் பிரகாரம்

அறிவுறை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஜூலை வரையும் முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற் கொள்ளப்படுகின்றன

(அ) காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மற்றும் கட்டிடத் தொகுதி அமைந்துள்ள 741 ஏக்கர் காணியில் 297 ஏக்கர் காணி வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் மீதியான 444 ஏக்கர் காணியின் உரிமை தொடர்பாக எழுத்து மூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த காணி, தொழிற்சாலை மற்றும் கட்டிடங்கள் என்பன உயர் பாதுகாப்பு வலையத்தில் இராணுவத்தின் பொறுப்பில் விளைவற்ற சொத்துக்களாக காணப்பட்டன.

(ஆ) 1967 ஜூலை 12 ஆம் திகதி 14756/7 ஆம் இலக்கங் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 288 ஆம் இலக்க காணி உறுதியின் மூலம் கொள்ளுபிடியில் அமைந்து 89.9 பர்சஸ் காணி கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாகியிருந்தது. மீளாய்வாண்டு அளவில் பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 735,000,000 தொகையான இந்தக் காணி, 2008 ஆண்டு முதல் அரச வங்கி ஒன்றிற்கு அடகு வைக்கப்பட்டு கடன் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடன் மீதி ரூபா 97,793,352 தொகை ஆக இருந்தது. காலி வீதியில் அண்மையிலுள்ள இந்த காணி, 50 வருட காலப்பகுதயில் ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்ற சொத்து ஒன்றாக காணப்பட்டது.

(இ) புத்தளம் மாவட்டத்தில் பாலாவியில் அமைந்துள்ள அட்டவில்லு எனப்படும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 221 ஏக்கர் காணியில் 159 ஏக்கர் 40 வருடங்கள் முதல் ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1981 ஆம் ஆண்டின் ஆரம்பிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்து கம்பனியின் பங்குகளின் 62.45 சதவீதப் பங்குகளின் உரிமை கூட்டுத்தாபனத்திற்கு இருந்து போதிலும், அந்த முதலீடுகளின் மூலம் கடந்த

26 வருட காலப்பகுதியில் நலன்கள் ஏதும் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருக்கவில்லை.

(ஆ) விற்பனை செய்வதற்காக இறக்குமதி செய்யப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 798,917 தொகையாக 50 கிலோ கிராம் எடை 1128 சீமெந்து பைகள் காலவதியாகியிருந்த காரணத்தினால் ரூபா 350,000 தொகைக்கு விற்பனவு செய்யப்பட்டமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 448,937 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது

## 4.5 பதவியணி நிருவாகம்

கூட்டுத்தாபனத்தின் பதவியணியினர் 2016 ஜுலை 31 திகதி முதல் தன்னிச்சையை ஓய்வு நட்டஈடு திட்டமொன்றின் மூலம் ஓய்வு பெற்றிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளவாறான பதவியணி 14 பேருக்கு வரையறுக்கப்பட்டிருந்தது தன்னிச்சையான ஓய்வு பெறல் நட்டஈட்டு முறையை செயற்படத்திய பின்னர் கூட்டுத்தாபனத்தின் பதவியணிக்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

## 5 நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு "நிகழ்ச்சி நிரலின்" பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக சீமெந்து கூட்டுத்தாபனத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

(அ) மேற்கூறியவாரு 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சீமெந்து கூட்டுதாபனத்தினால் உரிய முறையில் அறிந்திருக்காமையினால் அந்த கருமங்களுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நெருங்க வேண்டிய திருப்பு முனைகளை இலக்குகள் மீது நெருங்குவது தொடர்பாக அளவீடு செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

(ஆ) நிலைபேறான இலக்குகளை நெருங்குவதற்கான நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட கருமங்கள் வருடாந்த திட்டத்தில்

உட்படுத்தியிருக்காததுடன் அக்கருமங்கள் நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் உட்படுத்தி இருக்கவில்லை.

## 6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக் கூற்றுக்கள் சமர்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 இன் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டுமெனினும், சீமெந்து கூட்டுத்தாபனத்தின் 2017 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 29 திகதி கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

2016 ஜுலை மாதத்தில் தன்னிச்சையாக ஓய்வு பெறும் நட்டஈடு திட்டத்தை செயற்படுத்தி கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களை ஓய்வு பெறச்செய்த பின்னர் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தில் உள்ளக கணக்காய்விற்காக உத்தியோகத்தர் எவரும் ஈடுபடுத்தியிருக்காததுடன், ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக கருமங்கள் ஏதும் நிறைவேற்றியிருக்கவில்லை.

### 6.3 பெறுகைமற்றும் ஒப்பந்தவேலை செயற்பாடுகள்

#### 6.3.1 பெறுகைகள்

2006 ஜனவரி 25 திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகை செயற்பாடு கடைபிடிக்கப்படாமல், தொழில்நுட்ப ஆய்வு ஒன்று மேற்கொள்வதற்காக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அருவக்காலு காணி, தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது இந்த தொழில்நுட்ப ஆய்வு தொடர்பாக கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் கம்பனி இடையே, எழுத்துமூல உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

### 6.4 பாதீட்டு கட்டுபாடு

மீளாய்வாண்டின் போது 09 செலவு விடயங்களின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகளில் 23 சதவீதம் முதல் 229 சதவீதம் வரை முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6.5 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் அடிப்படையில் சீமெந்து விற்பனவு செய்வதற்காக விற்பனை முகவர் பதவி வழங்கப்படும் போது கடன் அடிப்படையில் வழங்கப்படும் பெறுமதிக்கு ஏற்ப பிணைமுறி ஒன்று பெற்றுக் கொள்ளாமை, கடன் வழங்கும் போது மற்றும் கடன் சேகரிக்கும் போது முகாமைத்துவத்தினால் முறையான மற்றும் வினைத்திறனுள்ள நடைமுறையொன்றினை கடைபிடிக்காமையால் மீளாய்வாண்டு இறுதிவரை கூட்டுத்தொகை ரூபா 52,506,824 தொகைக்கான கடன் மீதியினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1,200,000 தொகை கொள்வனவு செய்திருந்த காலி, உனவடுன, கஸ்பான இல் அமைந்து 06 ஏக்கர் காணி முகாமைத்துவத்தினால் ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்கு பயன்படுத்தாமையால் காலி பிரதேச செயலாளரினால் சுனாமியால் பாதிக்கப்பட்டோர்களை மீள்குடியேற்றப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தினால் அந்த காணிக்காக நட்டஈடு பெற்றுக் கொல்வதற்காக காலி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(இ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான புத்தளத்தில் அமைந்துள்ள 5352 ஏக்கர் அருவக்காலு சுண்ணாம்பு படிவு 50 வருட காலப் பகுதிக்காக ஹொல்ஸிம் லங்கா கம்பனிக்கு குத்தகை தொகை மாற்றமின்றிய குத்தகை உடன்படிக்கை ஒன்றின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. 2011 ஆகஸ்ட் 16 திகதி நடைபெற்று பாராளுமன்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் இந்த குத்தகை உடன்படிக்கையை திருத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டு 06 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அந்த குத்தகை உடன்படிக்கையைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறையில் அமைந்துள்ள எண்ணை தாங்கி தொகுதி எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளாமல் 2010 ஆண்டு முதல் பெற்றோலிய மொத்த கலஞ்சிய முடிவிடக் கம்பனியினால் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்தது.

## 7. முறைமைகள் மட்டும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது பின்வரும் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பரப்பு | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுபாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாமை மற்றும் கணிப்பீட்டு சபை நியமனம் செய்து சொத்துக்கள் கணிப்பீடு செய்தலை தாமதம் செய்தல். |
| (ஆ) களஞ்சிய கட்டுபாடு | சீமெந்து இருப்பு பேணல் கலஞ்சியப்படுத்தல் மற்றும் இருப்பு பதிவுகள் பேணல் தொடர்பாக முறையாக கவனம் செலுத்தாமை. |
| (இ) உள்ளகக் கட்டுபாடு | உள்ளக கட்டுபாட்டு முறையினை அறிமுகப்படுத்தி அவற்றை உரியமுறையில் செயற்படுத்தி கட்டுபாட்டு ஒன்றினை பேணப்படாமை, உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவப்பட்டு பேணப்படாமை. |
| (ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுபாடு | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்யாமை, கடன் விற்பனவு தொடர்பான அறிக்கை உரிய முறையில் பேணப்படாமை மற்றும் கடன் கொடுத்தோருக்கு செலுத்தி தீர்த்திருக்காமை. |
| (உ) உள்ளக கணக்காய்வு | உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஒன்றின் மூலம் உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம் காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்
31.12.2017 ம் ஆண்டில் உள்ளவாறன நிதியியல் நிலவர அறிக்கை

| | குறிப்பு | 2017<br>ரூபா. | 2016<br>ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | |
| ஆதனங்கள்,யந்திரம் மற்றும் சாதனங்கள் | **03** | 1,589,512 | 3,886,969 |
| ஆதனங்களில் முதலீடுகள் | **04** | 796,950,000 | 773,700,000 |
| நீண்டகால வருமதிகள் | **05** | - | - |
| முதலீடுகள் | **06** | 629,752,312 | 629,225,138 |
| | | **1,428,291,824** | **1,406,812,107** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட்கள் | **07** | 1,241,757 | 3,099,678 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | **08** | 74,469,339 | 89,212,053 |
| பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை | **09** | 9,157,568 | 13,687,035 |
| | | **84,868,664** | **105,998,766** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,513,160,488** | **1,512,810,873** |
| **பொறுப்புக்களும் பரிப்புக்களும்** | | | |
| **நேர்மையானவை** | | | |
| குறிப்பிட்ட மூலதனம் | | 966,971,845 | 966,971,845 |
| பொது ஒதுக்கங்கள் | | 9,996,952 | 9,996,952 |
| ஒதுக்கங்கள் மீதான மீள் மதிப்பாக்கம் | | 561,202,984 | 536,119,419 |
| நிறுத்திவைக்கப்பட்ட வருமாணம் | | (197,585,836) | (210,289,522) |
| விற்பனைக்கு தயாரகவுள்ள ஒதுக்கம் | | (465,956,132) | (465,956,132) |
| **மொத்த நேர்மையானவை** | | **874,629,812** | **836,842,562** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை** | | | |
| வட்டிகளில் தொங்கிக்கொணடிருக்கும் பொறுப்புக்கள் | **10** | - | - |
| நீண்டகால செலுத்துமதிகள் | **12** | 492,426,190 | 492,426,190 |
| ஓய்வுகால சலுகைப் பொறுப்புக்கள் | **13** | 3,795,861 | 3,297,663 |
| | | **496,222,051** | **495,723,853** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்துமதிகள் | **14** | 42,317,003 | 46,502,070 |
| வட்டிப் பொறுப்பில் இருக்கும் நடைமுறைப் பங்கு | **10** | 97,793,352 | 97,793,352 |
| வங்கிக்கடன் வட்டி செலுத்துமதி | **11** | 2,198,270 | 21,767,910 |
| பணமும் பணத்துக்கு நிகரானவையும் | **09** | - | 14,181,126 |
| | | **142,308,625** | **180,244,458** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **638,530,676** | **675,968,311** |
| **மொத்த நேர்மை மற்றும் பொறுப்புக்கள்** | | **1,513,160,488** | **1,512,810,873** |

அடைப்புக்குள் உள்ள இலக்கங்கள் கழிப்பனவை குறிப்பிடும்

கணக்கியல் கொள்கை பக்கம் 31 தொடக்கம் 34 வரையும்வு மற்றும் குறிப்புக்கள் பக்கம் 35 தொடக்கம் 38 வரையும் இவ் நிதியியல் அறிக்கையின் முழுமையான ஒரு பகுதியில் இருந்து.

